1996 ஆகஸ்ட் 22]

மின் நிலையத்தில் புதிய மின்மாற்றி வைக்க அனுமதி இருந்தும், இதுவரை அது நிறுவப்படாததால் உடனடியாக நிறுவப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலே சந்தித்து என்னிடத்திலே விண்ணப்பம் கொடுத்திருக் கிறார்கள். அரசாங்கம் அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 209, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

209—

நிலவரி வசூல் ரத்து செய்தல்

***2193—திரு. இரா. ஆவுடையப்பன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளிடம் நிலவரி வசூல் செய்வது ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நெல்லை மாவட்டம் ஏற்கெனவே வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிலவரியும் ரத்து செய்ய ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிலவரியை ரத்து செய்தாலும், வறட்சியால் மிக அதிகமாக இப்பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், வறட்சிப் பணியை மேற்கொண்டு அங்கே வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன்

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா வட்டங்களிலும் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 66,88,496.72. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி வேலை வாய்ப்பைப் பற்றியது. நான் இறுதியாக அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் சார்பிலே வரி தள்ளுபடி செய்யப்பட்டு, கூட்டுறவுக் கடன்களையும் நீண்டகாலக் கடன்களாக மாற்றியதற்குப் பின்னர், தஞ்சை, நாகை, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டங்களில் உள்ள குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிறார்களே, அவற்றை நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதா, அல்லவா என்பதைப் பற்றி தீர்மானிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 210, திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

210—

காவேரிப்பட்டணத்தில் தொழிற்சாலை அமைத்தல்

***809—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவேரிப் பட்டணத்தில் தேங்காய்ப்பூ தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் இளநீரைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS